செ. கு. எண்:310 நாள் :29.11.2013

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்
அறிக்கை – 29.11.2013

தமிழ்நாட்டில் அண்மையில் பெய்த மழையின் காரணமாக, 31.10.2013 அன்று விருதுநகர் மாவட்டம், திருச்சுழி வட்டம், பச்சேரி கிராமத்தைச் சேர்ந்த திரு. சுந்தரம் என்பவரின் மகன் சக்திவேல், திருச்சுழி கிராமம், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் அருகே மின்சாரம் தாக்கியதில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

1.11.2013 அன்று மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், இரும்பாடி கிராமத்தைச் சேர்ந்த திரு. சங்கையா என்பவரின் மனைவி திருமதி தில்லையம்மாள்;

4.11.2013 அன்று விழுப்புரம் மாவட்டம், நவமால் காப்பேர் கிராமத்தைச் சேர்ந்த திரு. மதிவாணன் என்பவரின் மகன் நாகேஸ்வரன்;

நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், சித்தமல்லி கிராமத்தைச் சேர்ந்த திரு. சக்கரபாணி என்பவரின் மனைவி திருமதி பானுமதி;

திண்டுக்கல் மாவட்டம், நத்தம் வட்டம், நத்தம் கிராம உட்கடை காந்தி நகரைச் சேர்ந்த திருமதி பெரியக்காள்;

திண்டுக்கல் மாவட்டம், நத்தம் வட்டம், நாயக்கன்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. முருகன் என்பவரின் மகன் பெரியண்ணன்;

-- ஆகியோர் இடி, மின்னல் தாக்கியதில் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

10.11.2013 அன்று கடலூர் மாவட்டம், சான்றோர்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு. கோவிந்தராஜ் என்பவரின் மனைவி திருமதி சாந்தி ;

16.11.2013 அன்று நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் வட்டம், பொத்தனூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. பாஸ்கரன் என்கிற வீரமணி என்பவரின் மனனவி திருமதி விஜி என்கிற விஜியா சாமுண்டீஸ்வரி;

விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டம், புக்கிரவாரி கிராமத்தைச் சேர்ந்த திரு. அர்ச்சுனன் என்பவரின் மனைவி திருமதி அய்யம்மாள்;

--- ஆகியோர் வீட்டின் சுவர் இடிந்து விழுந்ததில் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

16.11.2013 அன்று விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், மரக்காணம் கிராமத்தைச் சேர்ந்த திரு. அரிராமர் என்பவரின் மகன் சதீஷ்குமார் என்கிற ஏழுமலை மீது மரம் சாய்ந்து விழுந்ததில் உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரமடைந்தேன்.

இந்த துயர சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயர சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.**